# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.No.125/2017 and O.S.No.355/2019

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12-08-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : K.Madheshkumar | Village | : |
| Father's Name | : Kuppusamy | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை அறிந்து தான் நான் கையொப்பமிட்டுள்ளேன். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பமிட்டுள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது. தமிழ் படிக்கத் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.355/2019 மற்றும் யாகேஷ் கிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.125/2017 ஆகியவை கூட்டாக விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் எனக்காகவும் மற்றும் ஆனந்த் குமார் மற்றும் ரம்யா ஆகியோர் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன். நானும் மேற்கூறிய இருவரும் அசல் வழக்கு எண்.355/2019 ன் வாதிகள். அசல் வழக்கு எண்.355/2019 வழக்கை நான் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் அளிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு எண்.355/2019 ல் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 17 ஆவணங்களை எனது மூலம் குறியீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.355/2019 ல் யாகேஷ் கிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டுள்ளேனா என்றால் ஆம். அசல் வழக்கு எண்.355/2019 ல் யாகேஷ் கிருஷ்ணன் தனது எதிர்வழக்குரையில் தாவா சொத்து தனக்கு 1955 லிருந்து தனது மூதாதையர் மூலம் உரிமையாகியுள்ளது என சொல்லியிருக்கும் நிலையில், விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.355/2019 ன் இரண்டாவது பிரதிவாதியான மாரிமுத்து வழக்கு நிலுவையில் இருக்கும் முன் இறந்துவிட்ட நிலையில் அவரின் சட்டப்பூர்வ பிரதிநிதிகள் சேர்க்கப்படாததினால் அவரை சார்ந்த வழக்கு அற்றுப் போய்விட்டது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு

எண்.355/2019 ல் இடைக்கால மனு எண்.249/2017 உத்தரவில் நான் போலியான ஆவணம் தாக்கல் செய்ததாகவும் அதன் பேரில் நான் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் போலியான ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக வா.த,சா.31 ல் கண்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இடைக்கால மனு எண்.249/2017 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆதலால் இடைக்கால மனு எண்.249/2017 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையானது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.125/2017 ல் 7 முதல் 17 பிரதிவாதிகள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் எனக்கு தெரியும். என்ன காரணத்தினால் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது எனக்கு தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்து குறித்து ஆவணம் ஏற்பட்டதன் காரணமாகத் தான் பிரதிவாதிகள் 7 மற்றும் 8 சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவர்கள் சேர்க்கப்பட்டுள்ள விவரம் பற்றி எனது வழக்கறிஞர் என்னிடம் கூறினார். 7 முதல் 9 வது பிரிதிவாதிகள் மீது நான் அவர்கள் வில்லங்கம் ஏற்படுத்தியதற்காக நான் நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை. நான் கூடுதலாக எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).